**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2057, திருவள்ளுவர் ஆண்டு, பராபவ வருடம், ஆடி மாதம் –ம் தேதி**

**2026- ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04–ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் –286/2022**

**CNR No: TNSV15002988–2022**

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக காவல் சார்பு ஆய்வாளர், திருப்புவனம் காவல்நிலையம் அதன் குற்ற எண்.379/2019 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | 1.ஜெயபிரகாஷ், த/பெ.ஜெயராஜ், அகரம் காலனி, சிவகங்கை மாவட்டம்(இறப்பு)<br>2.விஜயராஜன் (எ) விஜி, த/பெ.கருப்பையா, அகரம் காலனி, சிவகங்கை மாவட்டம் |
| குற்றம் முறையிடப்பட்டது | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(i)–ன் கீழ் |
| குற்றம் கோப்பிற்கு எடுக்கப்பட்டது | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(i) –ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(i) –ன் கீழ் |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | 1 ம் எதிரி – 11.11.2019 |
| குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 21.11.2019 |
| எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 07.03.2024 |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | அ.சா.1: மு.வி 20.07.2026 கு.வி: இல்லை<br>அ.சா.2: மு.வி 27.07.2026 கு.வி:இல்லை<br>அ.சா.3: மு.வி & கு.வி 29.07.2026 |
| பல்வகை மனு அதன் முடிவு | ---- |
| கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | 03.08.2026 |
| தீர்வு | **முடிவாக,** 2 ம் எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(i) ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் 2ம் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் எதிரிகள் எழுதிக்கொடுத்த |

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.04 17:07:05 +0530

| | |
|---|---|
| | பிணைமுறி ஆவணம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. |

இவ்வழக்கு கடந்த 03.08.2026–ம் தேதியில் என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த பொழுது, அரசுக்காக கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–1 திருமதி. R.திலகராணி அவர்கள் ஆஜராகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.C.செந்தில்முருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கில் கடந்த 01.11.2019ம் தேதி காலை 09.30 மணிக்கு சாட்சி 2 இயற்கை உபாதை கழிப்பதற்காக அகரம் காலனியில் உள்ள கண்மாய்க்கு சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த CCL1 கருப்புச்சாமி என்பவர் சாட்சி 2யை பார்த்து என்ன வேற யாரும் வரச்சொன்னாங்களா இல்ல நான் வரவா என்று தனது பாலியல் விருப்பத்தை தெரிவித்து வேண்டுகோள் விடுத்துள்ளார் CCL1 ன் இத்தகைய செய்கையானது 354(A) இதச படி குற்றமாகிறது. இதனை சாட்சி 2 அவரின் அண்ணன் உறவான சாட்சி 1 யிடம் சொல்லி ஊர் பெரியவர்கள் முன்னிலையில் CCL1 கருப்புச்சாமியை கண்டித்துள்ளார்கள். இதை மனதில் வைத்துக்கொண்ட 02.11.2019ம் தேதி காலை 11.30 மணிக்கு சாட்சி 1 அவரின் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரிகள் A1, A2 மற்றும் CCL1 , CCL 2 ஆகியோர் சாட்சி 1யை பார்த்து ஏன்டா தேவிடியா மகனே யாரடா அசிங்கப்படுத்துற ஒந்தங்கச்சி வாழ்கையை முடிச்சுரும்டா என்று ஆளாலுக்கு அசிங்கமாக பேசி சாட்சி 1ஐ கீழே தள்ளிவிட்டு மேற்படி A1, A2 மற்றும் CCL1, CC2 கையால் மாறி மாறி அடித்தும் காலால் மாறி மாறி மிதித்தும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம்டா என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள் எதிரிகளின் இத்ததைய செயல்கள் 294(b), 323, 506(1) படி குற்றமாகிறது. எனவே இவ்வழக்கின் A1 ஜெயராஜ், A2 விஜயராஜன் என்ற விஜி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

R.VENKADESH PRASANTH

Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.04 17:07:11 +0530

2) இவ்வழக்கில் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற புகார் மற்றும் இதர ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வழக்கின் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(i), –ன் கீழ் குற்றம் புரிந்திருக்கிறார்கள் என்பதற்கு போதிய முகாந்திர ஆதாரங்கள் இருந்ததால் இவ்வழக்கு மேற்படி பிரிவின் கீழ் நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட பின்னர் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

4) இவ்வழக்கின் எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற அறிக்கையில் கண்டுள்ள குற்றம் பற்றி வினவ எதிரிகள் அவற்றை தம்மிச்சையாக மறுத்துக் கூறினார்கள். எனவே இருதரப்பினர்களை கேட்டும் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கின் எதிரிகள் மீது முதல் நோக்கில் குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரங்கள் இருந்தமையால் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(i) –ன் கீழ் குற்றச்சாட்டு பற்றி விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்தார்கள்

5)இவ்வழக்கு நிலுவையில் இருந்து வருகையில் 1ம் எதிரி காலம் ஆகிவிட்டதால் அவருக்கு எதிரான வழக்கு அற்றுப்போய்விட்டது.

6)இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) **அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:–**

7.1)அ.சா.1 விக்னேஸ்வரன் தனது சாட்சியத்தில், தான் அகரம்காலனி, திருப்புவனம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன் என்றும், தான் GK என்ற தனியார் நிறுவனத்தில் HRஆக பணி செய்து வருகிறேன் என்றும், பட்டியல் சாட்சி 4 தனலெட்சுமி தனது தங்கை உறவு ஆவார் என்றும், எதிரி விஜயராஜன் தனது தம்பி ஆவார் என்றும், எதிரிகளுடன் தான் சமாதானமாக செல்கிறேன் என்றும், சுமார் 07 வருடங்களுக்கு முன்பு காலை 11.30 மணியளவில் தான் தனது வீட்டின் முன்பு இருந்தபோது யாரோ சில நபர்கள் தன்னைப் பார்த்து அசிங்கமாக பேசி உனது தங்கை வாழ்க்கை முடிச்சிரும்டா என மீண்டும் அசிங்கமாக பேசி தன்னை கை, கால்களால் மாறி மாறி அடித்தும் மிதித்தும் உன்னைக்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.04 17:07:17 +0530

கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், கூட்டமாக அவர்கள் இருந்ததால் அவர்கள் குறிப்பிட்டு யார் என்று தனக்கு தெரியவில்லை என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் இந்த எதிரிகள் மீது தான் புகார் மனு கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், புகார் மனு அ.த.சா.ஆ.1 என்றும், இது சம்மந்தமாக தன்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.2) அ.சா.2 தனலெட்சுமி தனது சாட்சியத்தில், தான் எனது அப்பா ஊரான அகரம்காலனி, திருப்புவனம் என்ற முகவரியில் , சம்பவ சமயத்தில் வசித்து வந்தேன் என்றும், தற்போது தனக்கு திருமணமாகி தேனி ஆண்டிப்பட்டியில் வசித்து வருகிறேன் என்றும், அ.சா.1 விக்னேஷ்வரன் தனது சித்தி மகன் ஆவார் என்றும், அ.சா.1 எதிரியுடன் சமாதானமான விவரம் தனக்கு தெரியும் என்றும், தானும் அவருடன் சமாதானமாக செல்கிறேன் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.3) அ.சா.3 சங்கர், சிறப்பு சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 06.11.2019ம் தேதியன்று காலை 08.30 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் நிலையப் பொறுப்பிலிருந்தபோது அகரம் கிராமத்தைச் சேர்ந்த சசிகுமார் மகன் விக்னேஷ்வரன் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகாரின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண். 379/2019 இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) மற்றும் 354A ன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையினையும் இணைத்து கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம் திருப்புவனம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 என்றும், பின்னர் இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 09.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமச்சந்திரன், செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகள் கையொப்பம் செய்துள்ளனர் என்றும், மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 என்றும், மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 என்றும், பின்னர் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளான விக்னேஷ்வரன்,

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.04 17:07:24 +0530

தங்கபாண்டி, கலையரசி, தனலெட்சுமி, பூமிநாதன் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரி ஜெயபிரகாஷ் என்பவரை தேடி வந்த நிலையில் அவரை 11.11.2019ம் தேதியன்று 10.00 மணியளவில் திருப்புவனம் தாலுகா, அகரம் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், மற்ற எதிரிகள் 14.11.2019ம் தேதியன்று மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் சிவகங்கையில் முன்பிணை பெற்று தக்க பிணையில் சென்றதால் சார்பு ஆய்வாளர் அவர்களால் கைது செய்ய இயலவில்லை என்றும், அதன் பின்பு பாதிக்கப்பட்ட அ.சா.2 தனலெட்சுமி என்பவரை 15.11.2019ம் தேதியன்று வேண்டுகோள் கடிதத்துடன் அவரை 164 வாக்குமூலம் பதிவு செய்வதற்காக இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார் என்றும், அவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்றுள்ளார் என்றும், மேற்படி அ.சா.2 கொடுத்த 164 குவிமுச வாக்குமூலம் அ.த.சா.ஆ.5 என்றும், அதன் பின்பு சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) மற்றும் 354A ன் கீழ் கடந்த 21.11.2019 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

8) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கு எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அம்சங்களை குறித்து கு.வி.மு.ச.313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது, 2ம் எதிரி அவற்றினை பொய் சாட்சி என்று மறுத்துக் கூறினார். 2ம் எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா, என்று வினவிய போது எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார் .

9) இவ்வழக்கு எதிரிகள் மீது அரசுதரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்னையாகும்.

10) **தீர்வு–**

அரசு தரப்பு வழக்கானது இவ்வழக்கில் கடந்த 01.11.2019ம் தேதி காலை 09.30 மணிக்கு சாட்சி 2 இயற்கை உபாதை கழிப்பதற்காக அகரம் காலனியில் உள்ள கண்மாய்க்கு சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த CCL1 கருப்புச்சாமி என்பவர் சாட்சி 2யை பார்த்து என்ன வேற யாரும் வரச்சொன்னாங்களா இல்ல நான் வரவா என்று தனது

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.04 17:07:30 +0530

பாலியல் விருப்பத்தை தெரிவித்து வேண்டுகோள் விடுத்துள்ளார் CCL1 ன் இத்தகைய செய்கையானது 354(A) இதச படி குற்றமாகிறது. இதனை சாட்சி 2 அவரின் அண்ணன் உறவான சாட்சி 1 யிடம் சொல்லி ஊர் பெரியவர்கள் முன்னிலையில் CCL1 கருப்புச்சாமியை கண்டித்துள்ளார்கள். இதை மனதில் வைத்துக்கொண்ட 02.11.2019ம் தேதி காலை 11.30 மணிக்கு சாட்சி 1 அவரின் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரிகள் A1, A2 மற்றும் CCL1 , CC 2 ஆகியோர் சாட்சி 1யை பார்த்து ஏன்டா தேவிடியா மகனே யாரடா அசிங்கப்படுத்துற ஒந்தங்கச்சி வாழ்கையை முடிச்சுரும்டா என்று ஆளாலுக்கு அசிங்கமாக பேசி சாட்சி 1ஐ கீழே தள்ளிவிட்டு மேற்படி A1, A2 மற்றும் CCL1, CC2 கையால் மாறி மாறி அடித்தும் காலால் மாறி மாறி மிதித்தும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம்டா என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள் எதிரிகளின் இத்தகைய செயல்கள் 294(b), 323, 506(1) படி குற்றமாகிறது. எனவே இவ்வழக்கின் A1 ஜெயராஜ், A2 விஜயராஜன் என்ற விஜி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதனை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் முன்னிலைப்படுத்தபட்டுள்ளனர்.

11) அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார். எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் யாரும் எதிரி தான் இந்த குற்றச்சம்பவத்தை செய்தார் என்று சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் வாதிட்டார்.

12) இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 விக்னேஸ்வரன் தனது சாட்சியத்தில், எதிரியுடன் தான் சமாதானமாக செல்கிறேன் என்றும், சுமார் 07 வருடங்களுக்கு முன்பு காலை 11.30 மணியளவில் தான் தனது வீட்டின் முன்பு இருந்தபோது யாரோ சில நபர்கள் தன்னைப் பார்த்து அசிங்கமாக பேசி உனது தங்கை வாழ்க்கை முடிச்சிரும்டா என மீண்டும் அசிங்கமாக பேசி தன்னை கை, கால்களால் மாறி மாறி அடித்தும் மிதித்தும் உன்னைக் கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், கூட்டமாக அவர்கள் இருந்ததால் அவர்கள் குறிப்பிட்டு யார் என்று தனக்கு

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.04 17:07:35 +0530

தெரியவில்லை என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் இந்த எதிரிகள் மீது தான் புகார் மனு கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், இது சம்மந்தமாக தன்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.1ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13)இவ்வழக்கில் கேள்விபட்ட சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.2 தனலெட்சுமி தனது சாட்சியத்தில், அ.சா.1 விக்னேஷ்வரன் தனது சித்தி மகன் ஆவார் என்றும், அ.சா.1 எதிரியுடன் சமாதானமான விவரம் தனக்கு தெரியும் என்றும், தானும் அவருடன் சமாதானமாக செல்கிறேன் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.2ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14)இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 சங்கர், சிறப்பு சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 06.11.2019ம் தேதியன்று காலை 08.30 மணியளவில் மேற்படி சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் நிலையப் பொறுப்பிலிருந்தபோது அகரம் கிராமத்தைச் சேர்ந்த சசிகுமார் மகன் விக்னேஷ்வரன் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகாரின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண். 379/2019 இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) மற்றும் 354A ன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையினையும் இணைத்து கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம் திருப்புவனம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 09.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமச்சந்திரன், செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும்,

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.04 17:07:41 +0530

பின்னர் பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகள் கையொப்பம் செய்துள்ளனர் என்றும், பின்னர் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளான விக்னேஷ்வரன், தங்கபாண்டி, கலையரசி, தனலெட்சுமி, பூமிநாதன் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரி ஜெயபிரகாஷ் என்பவரை தேடி வந்த நிலையில் அவரை 11.11.2019ம் தேதியன்று 10.00 மணியளவில் திருப்புவனம் தாலுகா, அகரம் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், மற்ற எதிரிகள் 14.11.2019ம் தேதியன்று மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் சிவகங்கையில் முன்பிணை பெற்று தக்க பிணையில் சென்றதால் சார்பு ஆய்வாளர் அவர்களால் கைது செய்ய இயலவில்லை என்றும், அதன் பின்பு பாதிக்கப்பட்ட அ.சா.2 தனலெட்சுமி என்பவரை 15.11.2019ம் தேதியன்று வேண்டுகோள் கடிதத்துடன் அவரை 164 வாக்குமூலம் பதிவு செய்வதற்காக இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார் என்றும், அவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்றுள்ளார் என்றும், அதன் பின்பு சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) மற்றும் 354A ன் கீழ் கடந்த 21.11.2019 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சம்பவ சாட்சிகளின் சாட்சியத்தை வைத்தே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் பற்றி இந்நீதிமன்றம் தீர்மானிக்க முடியும். ஆனால் இவ்வழக்கின் சம்பவ சாட்சிகள் யாரும் எதிரிகள் தான் இக்குற்றச்செயல்களை செய்தார் என்று அரசு தரப்பில் யாதொரு சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே இவ்வழக்கில் எதிரிகள் தான் குற்றச் செயல்களை செய்தார்கள் என்ற அரசுத்தரப்பு வழக்கானது அரசுத்தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

15) **முடிவாக,** 2 ம் எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(i) ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் 2ம் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி ஆவணம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.04 17:07:46 +0530

செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04 –ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R.VENKADESH PRASANTH Digitally signed by R.VENKADESH PRASANTH Date: 2026.08.04 17:07:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

அரசு தரப்பு சாட்சிகள்:–

| | |
|---|---|
| அ.சா.1 | விக்னேஸ்வரன், நிகர்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | தனலெட்சுமி, கேள்விபட்ட சாட்சி |
| அ.சா.3 | சங்கர், சிறப்பு சார்பு ஆய்வாளர், புலன் விசாரணை அதிகாரி |

அரசுதரப்பு சான்றாவணங்கள்:–

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1/அ.சா.1 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2/அ.சா.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.3/அ.சா.3 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.4/அ.சா.3 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5/அ.சா.3 | மேற்படி அ.சா.2 கொடுத்த 164 குவிமுச வாக்குமூலம் |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள் இல்லை**

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்– இல்லை

R.VENKADESH PRASANTH Digitally signed by R.VENKADESH PRASANTH Date: 2026.08.04 17:07:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

குறிப்பு–
1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3.வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்திவைக்கப்படவில்லை.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.286/2022**
**தீர்ப்புரை**
**வரைவு/சீரான**
**நாள்: 04.08.2026**